# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை திரு.பொ. மகாராஜன், எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

2026ம் வருடம் ஏப்ரல் திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண். 3/2025 இன்

அசல் வழக்கு எண்.181/2014

--------

1. திருமதி.காந்தி.
2. திரு. முத்துலிங்கம்.
3. திரு. சேதுராமன். ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. திரு. முல்லைச்செல்வன்.
2. திருமதி. ஜெயம்.
3. திருமதி. தங்கம்.
4. திருமதி. ஜான்சிராணி.
5. திருமதி. கவிதா.
6. தமிழக அரசுக்காக,
மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்.
7. மேலூர், வட்டாட்சியர்.
8. வெள்ளலூர் ஊராட்சி,
அதன் தலைவர் (Executive Authority)
மூலமாக. ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக கடந்த 04.03.2026ம் அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுல்தான் அலாவுதீன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எம். சேதுராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதுரைகளைக் கேட்டும், மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் பரிசீலனைக்காக என் முன்பு இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இந்த மனுவானது வழக்குரையை திருத்தம் செய்யக் கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:–

1.1) வழக்கிடைச் சொத்துக்கள் உள்பட சர்வே எண்கள்.315/4–ல் 29 செண்டும், 316/1A–ல் 77 செண்டும், 316/2–ல் 43 செண்டும், 316/3–ல் 15 செண்டும், 316/5–ல் 8 செண்டும், 316/6–ல் 7 செண்டும் மற்றும் 316/7–ல் 6 செண்டும் ஆக ஏழு அயிட்ட சொத்துக்களும் 2, 3 வாதிகளின் தாத்தா சுப. முத்தையா மற்றும் அவரது மகன்கள் மகாலிங்கம் மற்றும் ராஜேந்திரன் ஆகிய மூவரும் 03.02.1979–ம் தேதியன்று தங்களுக்குள் ஒரு பாகப் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டு அதில் "ஏ" செடியூலாக மேற்படி, சொத்துக்கள் உள்ளிட்ட இதர சொத்துக்களும் சேர்த்து சுப. முத்தையா அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்களாகும். சுப. முத்தையா அவர்களின் மொத்த கூட்டுக்குடும்ப வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்த 1ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தந்தையுமான ராஜேந்திரன் அவர்களுக்கு கடந்த 1980ம் வருடம் வாய்க்கலாக கொடுக்கப்பட்ட சொத்துக்களான சர்வே எண்கள். 315/4–ல் 29 செண்டும், 316/1A–ல் 77 செண்டும், 316/2–ல் 43 செண்டும், 316/3–ல் 15 செண்டும், 316/5–ல் 8 செண்டும், 316/6–ல் 7 செண்டும் மற்றும் 316/7–ல் 6 செண்டும் உள்ளிட்ட ஏழு லக்க சொத்துக்களையும் சேர்த்து ராஜேந்திரன் அடைந்து அனுபவித்து வந்து தற்போது வாதிகள் அடைந்து இவர்களது தனித்த உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது.

1.2) 1ம் வாதிக்கு கணவரும், 2, 3 வாதிகளுக்கு தந்தையுமான ராஜேந்திரனுக்கு தனக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களுடன் முத்தையா வாய்க்கராலாக கொடுத்த மேற்சொன்ன ஏழு லக்கச் சொத்துக்களையும் சேர்த்து ராஜேந்திரன் முழு உரிமையாளர் என்ற

நிலையில், தனக்காகவும், தன் மக்களை மைனர்களாக கட்டுப்படுத்தியும் மேலூர் நிலவள வங்கிக்கு கடந்த 28.08.1992ல் மேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2356/1992–ன் மூலம் அடமானக்கடன் பத்திரமும் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி, நிலங்களைப் பொறுத்து வருவாய்துறை பதிவேடுகளில் முத்தையாவின் பெயர் மட்டும் இடம் பெற்றிருந்ததால் முத்தையாவும் சம்மதித்து இணைந்து கையெழுத்து செய்துள்ளார். மேற்படி, அடமானக் கடன் பத்திரத்தை தாக்கல் செய்யும்போது சுப. முத்தையா அவர்களே சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து மேற்படி, ஆவணத்தின் மூலம் ராஜேந்திரன் மேற்படி, 7 இலக்கச் சொத்துக்களுக்கும் முழு உரிமையாளர் என்பது நிரூபணமாகிறது.

1.3) மேற்படி, சொத்துக்களில் 316/1A–ல் 77 செண்டும், 316/5–ல் 8 செண்டும், 316/6–ல் 7 செண்டும் மற்றும் 316/7–ல் 6 செண்டும் ஆக நான்கு இலக்கச் சொத்துக்கள் மட்டும் மாண்புமிகு. மேலூர் சார்பு நீதிமன்றம் O.S.No.54/2019–வழக்கில் துலக்கப்பட்டு வழக்கின் தொடர் நடவடிக்கைகள் நிலுவையில் இருந்து வருகிறது.

1.4) மேலூர். சார்பு நீதிமன்ற O.S.No.54/2019–வழக்கில் துலக்கியுள்ள சொத்துக்கள் போக இந்த வழக்கில் சேராத 315/4–ல் 29 செண்டும், 316/2–ல் 43 செண்டும், 316/3–ல் 15 செண்டும் உள்ள சொத்துக்களைப் பொறுத்து தங்களை அனுபவிக்க விடாமலும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் முருகேசன் என்பவரும் சேர்ந்து அக்கிரம பிரவேசம் செய்து அடிக்கடி உள்ளே நுழைய முயற்சித்து வருகிறார்கள்.

1.5) மேற்படி, சொத்துக்கள் வழக்கில் ஏற்கனவே, குறிப்பிட்டிருப்பதாக நினைத்திருந்தோம். 3ம் மனுதாரர் தன்னுடைய வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுவிட்டு தற்போது தாய்நாடு திரும்பி வந்து தங்கள் தரப்பில் வழக்கு சம்பந்தமான வழக்குரையை படித்து பார்த்ததில் மேற்படி, 315/4–ல் 29 செண்டும், 316/2–ல் 43 செண்டும், 316/3–ல் 15 செண்டும் உள்ள சொத்துக்கள் மேற்படி, வழக்குரையில் விடுபட்டுபோய் வழக்கில்

சேர்க்கப்படாத விபரத்தை தெரிந்து கொண்டதாகவும், இந்நிலையில், மேற்படி, மூன்று சொத்துக்களையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெற வேண்டும் பின்னீடு யாதொரு வீண் வியாஜ்ஜியங்கள் ஏற்படாமலிருக்கவும் மேற்படி, மூன்று லக்கச் சொத்துக்களையும் வழக்கரையில் சேர்த்து அதன்படி, வழக்குரையை திருத்தம் செய்து அதன் மூலம் மேற்படி, சொத்துக்களைப் பொறுத்தும் நீதிமன்றம் மூலம் உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வேண்டியுள்ளது.

1.6) மேற்கண்ட, மூன்று லக்கச் சொத்துக்களை வழக்குரையில் சேர்த்தும் அதன் அடிப்படையில் 1 முதல் 4, 6, 7 மற்றும் 8 அயிட்ட சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வேண்டியுள்ளது. எனவே, அதன் அடிப்படையில் வழக்கினை திருத்தம் செய்து வழக்கினை தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால் தங்களுக்கு அளவிட முடியாத பாதிப்பு ஏற்படும். சொத்துரிமையும் பாதிக்கப்படும். எனவே, மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-</u>

2.1) மனுதாரர்கள்/வாதிகளின் தகப்பனார் மகாலிங்கம் அவர்களுடன் பிறந்த தம்பி ராஜேந்திரனின் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மனுதாரர்கள் மற்றும் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களின் Common ancestor முத்தையா ஆவார்கள்.

2.2) முத்தையா மற்றும் அவருடைய இரு மகன்கள் மகாலிங்கம் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து முத்தையா அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பொறுத்து கடந்த 03.02.1979-ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட பாகவிஸ்தி பத்திரத்தினை ஏற்படுத்திக் கொண்டார்கள். மேற்படி, பாகவிஸ்தி பத்திரமானது வா.சா.ஆ.1 ஆக கடந்த 12.04.2023ம் தேதி அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2.3) முத்தையா அவர்கள் கடந்த 29.10.2007ம் தேதியன்று அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தனது மூத்த மகனின் குமாரன் (பேரன்) முல்லைச்செல்வன் அவர்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் (ஆவண

எண்.4958/2007) எழுதிக் கொடுத்து, மேற்படி, சொத்தின் சுவாதீனமானது அன்றைய தேதியிலேயே முல்லைச்செல்வன் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. மேற்படி, தானசெட்டில்மெண்ட் பத்திரமானது வா.சா.ஆ.17 ஆக கடந்த 12.04.2023ம் தேதி அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கட்டுப்பட்ட சொத்து எதுவும் கடந்த 03.02.1979ம் தேதி பாகவிஸ்தி பத்திரத்தில் கட்டுப்பட்டது அல்ல.

2.4) Common ancestor முத்தையா அவர்கள் கடந்த 29.10.2012ல் காலமானார். மேற்படி, முத்தையா விட்டு சென்ற சொத்துக்கள் சம்பந்தமாக பாகம் பிரித்துக் கொள்ள எதிர்மனுதாரரின் சித்தப்பாவின் குடும்பத்தினர் முன் வராத காரணத்தினால், அசல் வழக்கு எண்.54/2019-(பழைய அசல் வழக்கு எண்.76/2014) என்ற வழக்கினை சார்பு நீதிமன்றம், மேலூரில் தாக்கல் செய்தோம். மனுவில் தாவா சொத்துக்களாக சேர்க்க வேண்டும் என்று சொல்லப்படும் புல எண்கள்.315/4, 316/2, 316/3-ஆகிய மூன்று சொத்துக்களும் மேற்படி, அசல் வழக்கு எண் 54/2019-ல் இந்த தாவா சொத்துக்கள் அல்ல. மேற்படி, அசல் வழக்கில் குறைவுற்ற இரு தரப்பினரும் மேல்முறையீடு செய்ததில் அசல் வழக்கு எண்.54/2019-ன் தாவா சொத்துக்கள் அனைத்திலும் வாதி, பிரதிவாதி இரு தரப்பினர்களுக்கும் சமபங்கு உள்ளது என்று தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

2.5) மனுவின் பிரமாணதாரர் சேதுராமன் அவர்களையும், கட்டுப்படுத்தி தான், இந்த அசல் வழக்கு எண்.181/2014-ஆரம்பம் முதல் நடந்து வருகிறது. கடந்த 12.04.2023ம் தேதி 2ம் வாதி முத்துலிங்கம் அவர்கள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் "நான் எனக்காகவும், 1, 3 வாதிகளுக்கும் சேர்த்து தான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்" என்று கூறியுள்ளார். தற்பொழுது இந்த மனுவின் பிரமானதாரர் சேதுராமன் அவர்கள் "நான் என்னுடைய வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுவிட்டு தற்பொழுது என்னுடைய தாய் நாடு திரும்பி வந்து எங்கள் தரப்பில் வழக்கு

சம்பந்தமான வழக்குரையை படித்து பார்த்ததில் வழக்குரையில் சொத்துக்கள் விடுபட்டுபோய் சேர்க்கப்படாத விவரத்தை தெரிந்து கொண்டதாக பொய்யுரைக்கிறார்". இந்த மனுவின் பிரமாணதாரர் வேண்டுமென்றே வழக்கினை நீட்டிக்க வேண்டும் என்று இந்த 3 அயிட்டம் சொத்துக்களை தாவா சொத்துக்களாக சேர்க்கப்பட வேண்டும் என்று பொய்யான சங்கதிகள் கண்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

2.6) கடந்த 12.04.2023ம் தேதி 2ம் வாதி முத்துலிங்கம் அவர்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பாரா 6ல் "03.02.1979ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் மட்டுமே பாகப்பிரிவினை செய்யப்பட்டன என்றும், பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வீடுகள், காலியிடங்கள், களம், ஓட்டு, வாட்டம், மாட்டு கொட்டம் வகையறாக்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ளாமல் இருந்து வந்தன என்றும், கடந்த 1980ம் வருடத்தில் வாய் மூலமாக வீடுகள், காலியிடங்கள், களம், ஓட்டு வாட்டம், மாட்டு கொட்டம் பாகம் பிரித்துக் கொண்டதில் சொத்து விபரத்தில் கண்ட 1, 2, 3, 4 லக்க சொத்துக்களை ராஜேந்திரன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்று வேண்டுமென்றே பொய் உரைத்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்தனர். இதேபோல், தான் பாகப்பிரிவினை வழக்கிலும், வாய் மூலமாக Common ancestor முத்தையா அவர்கள் ராஜேந்திரன் வாரிசுகளுக்கு சொத்துக்கள் வாய் மூலமாக ஒதுக்கியதாக எதிர்வாதம் செய்தனர். அனைத்தையும், நீதிமன்றம் நிராகரித்து முத்தையா விட்டு சென்ற சொத்தக்களில் சமபங்கு உள்ளது என்று பாகப்பிரிவினை வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு இந்த மனுவில் பாரா 5ல் O.S.No.54/2019–நிலுவையில் இருப்பதாக பொய்யான சங்கதிகளை கூறியுள்ளார்.

2.7) மனுதாரர்கள் தாவா சொத்துக்கள் மற்றும் தாவா சொத்தாக சேர்க்கப்பட வேண்டிய மூன்று இலக்கச் சொத்துக்களும் தங்களக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை மூலம் எதையும் கேட்கவில்லை. மனுதாரர்கள் வழக்கில்

தாவா சொத்துக்கள் மற்றும் தாவா சொத்தாக சேர்க்கப்பட வேண்டிய மூன்று இலக்கச் சொத்துக்களும் அவர்களும் பாத்தியப்பட்டது என்பதற்கும், கடந்த 1980ம் வருடம் முதல் அவர்களுக்கு பாத்தியபட்டு வரி வகையறாக்கள் செலுத்தி வருகிறோம் என்பதற்கும் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்பதையும் சமூகம் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமாய் இதன் மூலம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த வழக்கில் 12.04.2023ம் தேதி 2ம் வாதியை குறுக்கு விசாரணை செய்தபொழுது "வா.சா.ஆ.17 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் லக்க சொத்தாக புல எண்.316/2, 2ம் லக்க சொத்தாக புல எண் 316/3– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள 1, 2, 3 லக்க சொத்துக்கள் முத்தையாவின் பாக சொத்துக்கள் என்றால் சரிதான்" என்று கூறியுள்ளார்.

2.8) தாவா சொத்துக்களாக சேர்க்கப்பட வேண்டிய மூன்று லக்கச் சொத்துக்கள் சம்பந்தமாக எந்தவித ஆவணத்தையும் இந்த மனுதாரர்கள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இதிலிருந்து மேற்படி, சொத்துக்களுக்கும், மனுதாரர்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது சமூகம் நீதிமன்றத்திற்கு தெரிய வரும்.

2.9) தாவா சொத்தில், தாவா சொத்துக்களாக சேர்க்கப்பட வேண்டி சொத்துக்களில் மனுதாரர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றும், அவர்களை அனுபவிக்கவிடாமல் 1 முதல் 5 பிரதிவாதிகள் இடையூறு செய்ய முயற்சித்தார்கள் என்றும், தற்போது புதிதாக ஒரு மூல காரணத்தை வழக்கில் புகுந்த மனுதாரர்கள் முயற்சிக்கிறார்கள். மேற்படி, மனுவானது VAGUE–ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.10) புல எண்.316/2, 316/3–ஆகிய இரண்டு சொத்துக்களும் முல்லை செல்வன் அவர்களுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தனித்து பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் கடந்த 29.10.2007ம் தேதி முதல் இருந்து வருகிறது.

2.11) எந்தவித மூல காரணங்களும் இல்லாமல், எந்தவித அடிப்படை ஆவணங்களும் இல்லாமல் வாதி தரப்பு சாட்சி விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை முடிவற்ற நிலையில் வழக்கினை திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறுவதும் புதிதாக மூன்று லக்க சொத்துக்களை சேர்க்கப்பட வேண்டும் என்று கூறுவது வழக்கின் கட்டமைப்பையே (STRUCTURE OF THE CASE) மாற்றிவிடும். உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் சாட்சி விசாரணை ஆரம்பித்த பிறகு வழக்கினை திருத்தம் செய்யக் கூடாது என்று பல தீர்ப்புகளை வழங்கியுள்ளது.

2.12) ஆகையால் மேலே கண்ட காரணங்களினால் சமூகம் நீதிமன்ற இந்த திருத்தல் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ளாவிடில், இந்த மனுவில் பிறப்பிக்கப்படும் உத்தரவானது தவறான முன் உதாரணத்தை ஏற்படுத்தி விடும். எனவே, மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு, எதிருரை ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.**

5. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது, இந்த மனுவில் குறிப்பிடப்படும் சர்வே எண்களான சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்தும் பிரதிவாதிகள் தற்பொழுது வாதிகளை அனுபவிக்கவிடாமல் இடையூறு செய்கின்றனர் என்றும், எனவே, மேற்படி, மூன்று இலக்கச் சொத்தையும், கட்டுப்படுத்தி தீர்ப்பு பெற வேண்டும் என்பதற்காகவும்,

பின்னிட்டு யாதொரு பிரச்சனையும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும், இந்த மூன்று இலக்கச் சொத்துக்களையும் வழக்குரையில் சேர்க்கும் வகைக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, மாண்புமிகு. சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் காண்பிக்கப்படாத சொத்துக்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும், அசல் வழக்கில் குறிப்பிடப்படாத சர்வே எண்களான சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து தற்போது வழக்குரையில் சேர்க்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதிடுவதற்கு எந்தவொரு நியாயமான காரணமும் தெரிவிக்கப்படவில்லை என்றும், மேலும், வா.சா.1–குறுக்கு விசாரணையில், வா.சா.ஆ.17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் 1வது இலக்க சொத்தாக புல எண்.316/2, 2ம் இலக்கச் சொத்தாக புல எண்.316/3 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், வா.சா.ஆ.17 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள 1, 2, 3 இலக்கச் சொத்துக்கள் முத்தையாவின் பாகச் சொத்துக்கள் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று இலக்கச் சொத்துக்கள் சம்பந்தமாக எந்தவொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் பொத்தாம்பொதுவாக வழக்குரையில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடிதல்ல என்றும், புல எண்.316/2 மற்றும் புல எண்.316/3–ஆகிய இரண்டு சொத்துக்களும் முல்லை செல்வன் அவர்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்பட்டு கடந்த 29.10.2007ம் தேதி முதல் அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், வாதி தரப்பு சாட்சியம் முடிவுற்ற நிலையில், வழக்கினை திருப்ப வேண்டும் என்று வாதி கோரியுள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று வாதிட்டார்.

8. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, அசல் வழக்கானது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 29.10.2007ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம், ஆவண எண்.4958/2007–இல்லா நிலையது, செல்லாதது, மோசடியானது என்று விளம்புகை செய்யக் கேட்டும், தாவா 1 முதல் 4 இலக்கச் சொத்துக்களில் வாதிகளின் அமைதியான சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டும், தாவா 2ம் இலக்கச் சொத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ள காம்பவுண்ட் சுவறை அப்புறப்படுத்த வேண்டும் என்று செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கேட்டும், இதர பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கின் வழக்குரைப்படி, 5 இலக்கச் சொத்துக்கள் மட்டுமே தாவா சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. 5ம் இலக்கச் சொத்தானது பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது.

10. மனுதாரர் தரப்பில் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளான மாண்புமிகு. மேலூர் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.54/2019 (Old O.S.No.76/2014)–என்ற வழக்கில் துலக்கியுள்ள சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்களான சர்வே எண்களான சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து அசல் வழக்கில் வழக்குரையில் சேர்க்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, O.S.No.54/2019–வழக்கானது இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு இந்த வழக்கில் வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட A.S.No.43/2022 மற்றும் A.S.No.75/2023 ஆகியவற்றைப் பொறுத்து A.S.No.43/2022 தள்ளுபடி செய்யப்பட்டும், A.S.No.75/2023 அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது.

11. இருப்பினும், மேற்படி, பாகப்பிரிவினை வழக்கினைப்

பொறுத்தமட்டில் தற்போது இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களான சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து வழக்கு இல்லை என்பது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

12. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் தற்பொழுது சர்வே எண்களான சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சொத்துக்களும் அசல் வழக்கில் சேர்க்கப்பட்டிருந்ததாக நினைத்திருந்ததாகவும், ஆனால், வழக்குரையில் விட்டுப்போய்விட்டது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. அசல் வழக்கானது 2014ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு O.S.No.181/2014–என்ற எண்ணாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. 10.08.2015ம் தேதி 2ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 1, 3 முதல் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 02.09.2016ம் தேதி 6ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 7ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு 20.01.2017ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. அதன்பின்பு, 12.04.2023ம் தேதி வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.19 வரையான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு, 18.07.2023ம் தேதி வா.சா.1யைப் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். 07.08.2023ம் தேதி வா.சா.1 பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரைான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 12.09.2023ம் தேதி வா.சா.1 பகுதியளவு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். 07.11.2023ம் தேதி வா.சா.1 பகுதியளவு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். 09.01.2024ம் தேதி வா.சா.1 பகுதியளவு

குறுக்கு விசாரணை செய்யப்பட்டு அன்றைய தினம் வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிவடைந்துள்ளது. இந்த வழக்கானது வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த சமயம் வாதிகள் தரப்பில் கட்டளை 16, விதி 1ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு I.A.No.1/2024–என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்த நிலையில், மனுதாரர் தரப்பில் சர்வே எண்களான சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து அசல் வழக்குரையில் சேர்க்க வேண்டும் என குறிப்பிட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14. மனுதாரர் தரப்பு வாதப்படியே, தற்பொழுது சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்று வாதிடப்படுகிறது.

15. இது குறித்து உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17 கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளது.

Order 6, Rule 17- Amendment of pleadings.—

“The Court may at any stage of the proceedings allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real questions in controversy between the parties:

Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the Court comes to the conclusion that in spite of due diligence, the party could not have raised the matter before the commencement of trial.”

16. மேற்படி, சட்டப்பிரிவின் அடிப்படையில் பார்க்கும்போது, அசல் வழக்கின் உண்மையான பிரச்சனையை முடிவு செய்யும் வகைக்காக

வழக்குரையில் எந்த நேரத்திலும், திருத்தம் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மிகவும் கவனமாக இருந்தும், தரப்பினர்கள் விசாரணைக்கு முன்பு தெரிவிக்க முடியவில்லை என்று முடிவுக்கு வந்தலன்றி மற்றபடி வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பத்தை விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்பு நீதிமன்றம் அனுமதிக்கக் கூடாது என்று விளக்கமளித்துள்ளது.

17. ஆனால், இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டு 2014ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கில் வா.சா.1ன் சாட்சியம் முழுமையாக முடிவடைந்த பின்பு, அசல் வழக்கில் குறிப்பிடப்படாத சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து தற்பொழுது 1 முதல் 5 பிரதிவாதிகள் பிரச்சனை செய்து வருகிறார்கள் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அபிடவிட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, எந்த தேதியில் என்ன பிரச்சனை செய்தார்கள் என்பது குறித்து எந்தவொரு தெளிவான விளக்கமும் தெரிவிக்கப்படாத நிலையில், ஒரு வேளை சர்வே எண்.315/4, சர்வே எண்.316/2 மற்றும் சர்வே எண்.316/3 ஆகியவற்றைப் பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் தற்போது பிரச்சனை செய்தார்கள் என்று எடுத்துக் கொண்டாலும் கூட அது புதிய வழக்குமூலத்தையே ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொண்டும், புதிய வழக்குமூலம் ஏற்படுமாயின் அது குறித்து தனியாக வழக்கு தாக்கல் செய்து தீர்வு காண வேண்டுமே தவிர நிலுவையில் உள்ள வழக்கில் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்று வாதி கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–
(திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் –</u> இல்லை.

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –</u>

| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | ------- | கிரைய ஆவணம். (ஆவண எண்.2356/1992) | சான்றிட்ட நகல். |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை.</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –</u>

| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 24.03.2022 | மேலூர் சார்பு நீதிமன்றம், O.S.No.54/2019ன் தீர்ப்புரை. | சான்றிட்ட நகல். |
| எ.ம.சா.ஆ.2 | 24.03.2022 | மேலூர் சார்பு நீதிமன்றம், O.S.No.54/2019ன் தீர்ப்பாணை. | சான்றிட்ட நகல். |
| எ.ம.சா.ஆ.3 | 22.03.2024 | மதுரை, 6வது கூடுதல் மேல்முறையீடு எண்.43/2022 மற்றும் 75/2023ன் தீர்ப்புரை. | சான்றிட்ட நகல். |

ஒப்பம்/–
(திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
மேலூர்
இடைநிலை மனு எண்.3/2025
இன்
அசல் வழக்கு எண்.181/2014
சீரான/வரைவு உத்தரவு
நாள் 10.04.2026